**நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், உடுமலைப்பேட்டை.**

**முன்னிலை : திருமதி.T.நித்யகலா, பி.காம்., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**உடுமலைப்பேட்டை.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், மாசி திங்கள் 25 ஆம் நாள்)

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 348/2025**

**CNR No.TNTI17-000309-2025**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர், குற்றப்பிரிவு உடுமலைப்பேட்டை காவல் நிலையக் குற்ற எண். 850/2024 |
| //எதிர்// | | |
| எதிரி | – | சுப்ரமணி (44/2024),<br>த/பெ. முருகேசன்,<br>2/40, பிச்சுகுட்டி லேன்,<br>உடுமலைப்பேட்டை.<br>திருப்பூர் மாவட்டம். |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 318(4) BNS-ன் கீழும், Lottery Regulation Act 1998, பிரிவு 5 & 7 (1)-ன் கீழும் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | எதிரி மீது Lottery Regulation Act 1998, பிரிவு 5 & 7 (1)-ன் கீழ் |
| தீர்மானம் | – | முடிவாக அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட Lottery Regulation Act 1998, பிரிவு 5 & 7 (1)-ன் கீழ் எதிரி குற்றவாளி என முடிவு செய்து எதிரிக்கு ரூ.10,000/-ம் அபராதம் விதித்தும் அபராத தொகை கட்டத்தவறினால் ஒரு வாரம் மெய்க்காவல் சிறைதண்டனை வித்தும் கு.வி.மு.ச பிரிவு 241-ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகிறது. |
| புகார் நாள் | – | 24.12.2024 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | – | 24.12.2024<br>18.02.2026 |
| பிணையில் சென்ற நாள் | – | 24.12.2024 ஆம் தேதியன்று காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார்.<br>09.03.2026 |
| கோப்பு நாள் | – | 27.06.2025 |

| | | |
|---|---|---|
| விசாரணை தொடங்கப்பட்ட நாள் | – | – |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | – | – |
| தீர்ப்புரை நாள் | – | 09.03.2026 |

இவ்வழக்கானது கடந்த 27.06.2025 ம் தேதி இந்நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் இலவச சட்ட வழக்கறிஞர் திரு.M.சிக்கந்தர் பாஷா, BBM., LLB., ஆஜராகியும் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டும் எதிரியின் குற்ற ஒப்புகை மனு தாக்கல் செய்ததையும் இவ்வழக்கில் அனைத்து ஆவணங்களையும், பரிசீலனை செய்த பின்னரும் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்தளிக்கும்.

## தீர்ப்புரை

1) குற்ற இறுதியறிக்கைப்படி, கடந்த 24.12.2024 ம் தேதி 17.00 மணிக்கு உடுமலைப்பேட்டை காவல் நிலைய சரகம் எல்லைக்குட்பட்ட உடுமலை கொல்லம்பட்டறை BBH ஹோட்டல் அருகில் எதிரியானவர் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட லாட்டரி சீட்டுகளை போலியான லாட்டரி சீட்டு எண்களை வெள்ளை துண்டு பேப்பரில் எழுதி நேரிலும் வாட்ஸ்ஆப் எண்களுக்கு அனுப்பியும் சில எண்களுக்கு பரிசு உள்ளதாக கூறி பொதுமக்களை ஏமாற்றி போலியான லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்த குற்றத்திற்காக எதிரியானவர் பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவு 318(4) r/w Lottery Regulation Act 1998, பிரிவு 5 & 7 (1)–ன் கீழும் தண்டிக்கத்தக்கவராகிறார் என்றும், குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கில் எதிரி சிறையிலிருந்து முன்னிலைப்படுத்தப்பட்டபோது எதிரிக்கு வழக்கு தொடர்பான ஆவண நகல்கள் அனைத்தும் பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா 2023, பிரிவு 230–பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. பின்பு இவ்வழக்கானங்களைப் பரிசீலிக்கையில் குற்ற இறுதி அறிக்கையில்

பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவு 318(4)–ன் கீழும் எதிரி மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள நிலையில், 161 வாக்குமூலங்களின் சங்கதிகள் ஆவணங்கள் 318(4)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைய போதுமான முகாந்தரம் பொருந்தாததால் மேற்படி சட்டப்பிரிவு நீக்கப்பட்டு, எதிரி மீது பாரதிய Lottery Regulation Act 1998, பிரிவு 5 & 7 (1)–ன் கீழான குற்றத்திற்கான முதல் நோக்கு முகாந்தரம் இருப்பதாக நீதிமன்றம் திருப்தியுற்றதால் பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா 2023, பிரிவு 263–ன் கீழ் குற்றச்சாட்டின் சாராம்சம் குறித்து குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு தெரிந்த தமிழ் மொழியில் விளக்கிக் கேட்டபோது, அவர் தன் மீதான குற்றத்தை தம்மிச்சையாக ஒப்புக் கொண்டார்.

3) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சினை யாதெனில், குற்றஞ்சாட்டப்பட்ட நபர் மீது சுமத்தப்பட்ட குற்றத்தை குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தன்னிச்சையாக ஒப்புக்கொண்டுள்ளாரா என்பதேயாகும்.

4) குற்றஞ்சாட்டப்பட்ட நபர் இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது குற்றத்தை ஒப்புக்கொண்டு மனு தாக்கல் செய்துள்ளதை கருத்திற்கொண்டும், அவர் மீதான குற்றச்சாட்டைப் பற்றி அவருக்கு தெரிந்த தமிழ் மொழியில் விளக்க கேட்டபோது, குற்றஞ்சாட்டப்பட்ட நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டு குறைந்தபட்ச அபராதம் விதிக்குமாறு வேண்டுகிறேன் என்று கேட்டுக் கொண்டுள்ள நிலையில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொள்வது தன்னிச்சையானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

5) குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தன் மீதான குற்றத்தை தன்னிச்சையாக ஒப்புக் கொண்டதால், குற்றஞ்சாட்டப்பட்ட நபர் பாரதிய நியாய சன்ஹிதா 2023, Lottery Regulation Act 1998, பிரிவு 5 & 7 (1)–ன் கீழ் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எனவே, குற்றவாளிக்கு வழங்கப்படவுள்ள தண்டனை குறித்து வினவியபோது, அவர் பின்வருமாறு கூறினார்.

**6) குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் பதில்**

**" குறைந்தபட்ச அபராதம் விதிக்குமாறு வேண்டுகிறேன் "**

7) குற்றஞ்சாட்டப்பட்ட நபர் இந்த வழக்கில் 18.02.2026–ஆம் தேதியன்று நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு, இன்று வரை (09.03.2026) சிறையிலிருந்து வருகிறார்.

8) மேற்படி குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் பதிலை கருத்தில் கொண்டும் எதிரியின் வயது மற்றும் குடும்ப சூழ்நிலையைக் கருத்தில்கொண்டும் வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டும் எதிரிக்கு Lottery Regulation Act 1998, பிரிவு 5 & 7 (1) ன் கீழான குற்றத்திற்கு ரூ.10,000/– அபராதம் விதித்தும் அபராதம் கட்டத்தவறினால் ஒரு வாரம் மெய்க்காவல் சிறை தண்டனை விதிக்கப்படுகிறது. மேற்கண்ட தண்டனை தீர்ப்பானது குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973 பிரிவு 241–ன் கீழ் வழங்கப்படுகிறது.

9) இவ்வழக்கின் சான்றாதாரமான PR.No.31/2026 ல் கண்ட அயிட்டம்–1. கருப்பு நிற VIVO செல்போன் ஒன்று, அயிட்டம்–2. வெள்ளை நிற துண்டு சீட்டுக்கள் நான்கு,(அதில் 1) AG 74, 84, 92, 86 2) AE 45, 56, 73, 82 3) BG 41, 37, 26, 67 4) AC 22, 33, 64, 71) ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளது. அயிட்டம்–1 ஆனதை அதன் உரிமையாளர் எதிரி சுப்பிரமணி த/பெ.முருகேசன் என்பவர் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து Crl.M.P. No.192/2026–ல் ஒப்படைக்கப்பட்டுள்ளதை இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அவரே வைத்துக் கொள்ளவும், அயிட்டம்–2 ஆனதை இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் திருத்தப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 09ம் நாளாகிய இன்று இவ்வவையறிய பகரப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.03.09 21:33:36 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.

1. அரசு தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை.
2. அரசு தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.
3. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட அயிட்டம்-1. கருப்பு நிற VIVO செல்போன் ஒன்று, அயிட்டம்-2. வெள்ளை நிற துண்டு சீட்டுக்கள் நான்கு,(அதில் 1) AG 74, 84, 92, 86 2) AE 45, 56, 73, 82 3) BG 41, 37, 26, 67 4) AC 22, 33, 64, 71) (பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பிரிவு 264-ன் கீழ் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால் குறியீடு செய்யப்படவில்லை).

<u>குறிப்பு :</u>

1. குற்றஞ்சாட்டப்பட்ட நபர் வழக்கு விசாரணை காலத்தில் பிணையில் இருந்துள்ளார்.
2. வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கும், சிறைச்சாலைக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. குற்றஞ்சாட்டப்பட்ட நபர் குற்றவாளி என்று தீர்மானித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால், தீர்ப்புரை நகலானது குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு தீர்ப்பு வழங்கிய உடனேயே, இலவசமாக பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பிரிவு 404-ன் படி வழங்கப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.03.09 21:33:41 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.